லும் பெருநரம்பு (எத) சிறு நரம்பு (௰உத) நாபிதானத்தில் பெருநரம்பு (௬) சிறுநரம்பு (உத) நவத்துவாரத்துக்கும் வாசல் ௬க்கு பெருநரம்பு (105½) சிறுநரம்பு (௬தடுா) முடிவில் பெருநரம்பு (௬த) சிறுநரம்பு (௬த) எலும்பிலுங் குடலிலும் சிறுநரம்பு (எத) ஆக நரம்பு நாடி (எ௰உத)

இனி கால்களிலும் கைகளிலும் சந்துப்பொருத்தல் (௬அ) கழுத்துக்குக் கீழ்ச்சந்து (அ௬) கழுத்துக்கு மேற்சந்து (அ௬) ஆக சந்து பொருந்தல் (௬௬எ.)

இனிநாசியில்ஜலம்-பலம் (சக) எலும்பில்ஜலம்-பலம் (எ) மாம்சத்தில்ஜலம்-பலம் (உக) ஆகஜலம்-பலம் (௬௬.)

காலிலும் கையிலும் எலும்புகள் (ா௬௰) மூலாதாரத்தைத் தொட்டு ஆக்கினையளவும் மொழியெலும்பு (௬௰) கழுத்துக்குமேல் பொடியெலும்பு (3½) இருபக்கத்திலும் எலும்பு (உ௰) ஆக எலும்பு (1056)

இனி சரீரத்தில் (3½) கோடி ரோமத்துவாரங்களும் நாளொன்றுக்கு (உகத௬ா) சுவாசமும். ௬௬) தத்துவமும், (௬௬௰) பலமாம்சமும், உழக்குபித்தமும், ஆழாக்குச் சேத்துமமும் கூடி சரீரத்திலே நாளொன்று

## இதற்குப்பிரமாணம்

## திருமந்திரம்.

முப்பதுமுப்பது முப்பத்தறுவருஞ்
செப்புமதனிடை கோயிலில்வாழ்பவர்
செப்புலதனிடை கோயில்சிதைந்தபின்
ஒக்கஅவரும் ஓடெடுத்தாரே.

---

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த

## தேவாரம்.

## திருக்கண்டீச்சுரம்.

தானெழுமங்கிரீண்டா சழக்குடைபதிக்குநாதன்
வாணிபந்தொண்ணூற்றுறு வருமிகமயக்கஞ்செய்யப்
பேணியபதிக்குள்நின்று பிரியும்போதறியமாட்டேன்
சேணுயர்மாடமோங்குந் திருக்கண்டீச்சுரத்துளானே.

## அவையடக்கம்.

தத்துவந்தொண்ணூற்றுறுந் தாழ்விலாவாயுபத்தும்
மெத்தனாடிபத்தும் மெய்யுளே ஆறுதாரம்

| இரண்டாந்தத்துவம் - ௬0 | மூதற்றத்துவம்—௬0 _ ன் வரலாறு. |
| --- | --- |
| நாடி ௰ | பூதம்—௫. |
| வாயு ௰ | பிருதிவி = மண் |
| சயங்கள் ௫ | அப்பு = நீர் |
| கோசம் ௫ | தேயு = அக்கினி |
| ஆக ௬0. | வாயு = காற்று |
| மூன்றாந்தத்துவம் - ௬௯. | ஆகாசம் = சுத்தவெளி |
| ஆதாரம் ௯ | பொறி—௫. |
| மண்டலம் ௩ | சோத்திரம் = செவி |
| மலம் ௩ | தொக்கு = உடம்பு |
| தோஷம் ௩ | சட்சு = கண் |
| ஏடணை * ௩ | சிகுவை = நாக்கு |
| குணம் ௩ | ஆக்கிராணம் = மூக்கு |
| இராகம் ௮ | சத்தம் = கேட்கப்பட்டது (செவிக்குயிர்க் கூறு.) |
| வினை ௨ | பரிசம் = சுகதுக்கவறிவு (உடம்புக்குயிர்க்கூறு) |
| அவஸ்தை ௫ | |
| ஆக ௬௯. | |

* ஈஷணை என்னும் இச்சைப்பொருட்டான வடமொழியானது, விதிவழியே ஐகார வீறாய் ஈடணை என நின்றுமரூஉவழக்கால் ஏடணை என வழங்குகின்றது.

நின்மல துரியாதீதம்; சிவத்தைத் தரிசித்துச்சிவாநந் தந்தழுந்துதல்.

## கேவலாவத்தை

சர்வசங்காரகாலத்து ஆன்மாக்கள் சுத்தமாயாகாரணத்திலே யொடுங்கிச் சிருட்டிகாலமளவும் ஆணவ்சகித்தான் மறைப்புண்டு கலையாதி தத்துவங்களோடுங் கூடாமல் யாதொரு நினைவுமின்றியிருப்பது. இது கண்ணுனது இரவின் இருளிலே யொளி கெடாமல் விழித்திருப்பதுபோலும்.

## சகலாவத்தை.

சிருட்டிதொடங்கிச் சர்வசங்காரமளவும் ஆன்மாக்கள் தத்துவம் முப்பத்தாறோடுங் கூடி எண்பத்துநாலுலட்ச யோனிபேதங்களிலும் பிறந்திறந்துழல்வது. இது இரவின் இருளிலழுந்திக்கிடந்தகண் விளக்கிறலே விருணீங்கிப் பலபதார்த்தங்களைக் காண்டல்போலும்.

## சுத்தாவத்தை.

ஆன்மாக்கள் கேவல சகலபட்டுப் பிறந்திறந்து திரியுமவசரத்து அவர்கட்கு இருவினை யொப்பும், சத்திநிபாதமும், குருவருளும், ஞானசாதனமும், மும்மலக்கழிவும், வாதனை நீக்கமும், ஞானப் பெருக்கமு, முறையே

